# THIRUARUTPA– DEATHLESS GREAT LIFE

# மரணமிலாப் பெருவாழ்வு

One evening in the first half of December 1873, Saint Ramalingam brought out a lamp from his room at Mettukuppam, placed it before his followers and informed them as follows:

1. I am going to close the door of my room. You believe that God is now in the flame of the lamp. Therefore you worship the flame of the lamp without wasting your time. You do meditation before this flame of the lamp keeping in your mind what I have stated in the 28 Poems commencing with the word "Ninainthu, Ninainthu" (6C/34: 1 to 28).

2. "Now I am in this form of body. Hereafter I will enter into all living beings."

The wordings in paragraph 2 cited, denote that he had been crowned as the chieftain of NAADHANTHA NAADU by the Almighty.

It is to be borne in mind that the Saint had particularly drawn the attention of the world to his 28 Poems commencing with the words "Ninainthu, Ninainthu". I therefore feel that it is expedient to translate all those Poems.

The 28 Poems specified by the Saint had been compiled in THIRUARUTPA in Chapter 6C - under part 34, DEATHLESS GREAT LIFE.

Now the readers may study the translation of each Poem in detail:

1. நினைந்துநினைந்து உணர்ந்துஉணர்ந்து நெகிழ்ந்துநெகிழ்ந்து அன்பே
   நிறைந்துநிறைந்து ஊற்றெழுங் கண்ணீரதனால் உடம்பு
   நனைந்துநனைந்து அருளமுதே நன்னிதியே ஞான
   நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று
   வனைந்துவனைந்து ஏத்துதும் நாம் வம்மின் உலகியலீர்
   மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்
   புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல்கின்றேன்
   பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருணம் இதுவே.

   Oh people of the world, come here!
   We shall deeply think of the merry and love of the Supreme God.

We shall bow down and praise his glory with tears. He is our rightful Lord.
If we praise and worship him, we can get deathless life.
My words are neither falsehood nor exaggeration. I tell only truth.
This is the time to enter into the narrow path and
reach the golden temple which is within our forehead'

2. புகுந்தருணம் இதுகண்டீர் நம்மவரே நான்தான்
புகல்கின்றேன் என்மொழிஓர் பொய்மொழி என்னாதீர்
உகுந்தருணம் உற்றவரும் பெற்றவரும் பிறரும்
உடைமைகளும் உலகியலும் உற்றதுணை அன்றே
மிகுந்த சுவைக்கரும்பே செங்கனியே கோற்தேனே
மெய்ப்பயனே கைப்பொருளே விலையறியா மணியே
தகுந்ததனிப் பெரும்பதியே தயாநிதியே கதியே
சத்தியமே என்றுரைமின் பத்தியொடு பணிந்தே.

Oh my friends! You understand that this is the time to enter into the narrow path.
Don't think that I am telling lie.
When death comes to you, your wife, children, parents and friends attached to you
And gold, money, house, lands, garden, etc. possessed by you can't prevent your death.
But the Holy Spirit is so sweet, so merciful,
invaluable and everlasting virtual form of God.

3. பணிந்துபணிந் தணிந்து தணிந்து பாடுமினோ உலகீர்
பரம்பரமே சிதம்பரமே பராபரமே வரமே
துணிந்து வந்த வேதாந்த சுத்தஅனு பவமே
துரியமுடி அனுபவமே சுத்த சித்தாந்த மதாய்த்
தணிந்தநிலைப் பெருஞ்சுகமே சமரச சன்மார்க்க
சத்தியமே இயற்கையுண்மைத் தனிப்பதியே என்று
கணிந்துளத்தே கனிந்துநினைந் துரைத்திடில் அப் பொழுதே
காணாத காட்சிஎலாம் கண்டு கொளல் ஆமே.

Oh people of the world!You keep your eyes and mind closed and deeply think
That the Supreme God of the heaven is seated as Holy Spirit within our forehead;
That he will appear while doing meditation and help for
self-realisation i.e., seeing the subtle body;
That the Holy Spirit is the true natural form existing in all mankind
And that knowing this truth is defined as Sanmargam.

If you follow this path, you will see wonders.

4. கண்டதெலாம் அநித்தியமே கேட்டதெலாம் பழுதே
   கற்றதெலாம் பொய்யே நீர் களித்ததெலாம் வீணே
உண்டதெலாம் மலமே உட்கொண்டதெலாம் குறையே
   உலகியலீர் இதுவரையும் உண்மையறிந் திலிரே
விண்டதனால் என்? இனிநீர் சமரசசன் மார்க்க
   மெய்ந்நெறியைக் கடைப்பித்து மெய்ப்பொருள் நன்குணர்ந்தே
எண்டகு சிற்றம்பலத்தே எந்தைஅருள் அடைமின்
   இறவாத வரம்பெறலாம் இன்பமுற லாமே.

All that you have seen in the world are unstable.
All you have heard from false Preceptors and read from various books are unworthy.
What you have eaten and drunk are of no use.
So far you have not understood the truth.
I invite you to come to the real path of Unity of Holy Spirit of mankind (SANMARGAM)
And understand the Holy Spirit within your forehead
to get the grace of Almighty and salvation.

5. இன்புறலாம் எவ்வுலகும் ஏத்திட வாழ்ந்திடலாம்
   எல்லாம்செய் வல்லசித்தி இறைமையும் பெற்றிடலாம்
அன்புடையீர் வம்மின் இங்கே சமரசசன் மார்க்கம்
   அடைந்திடுமின் அகவடிவிங்கு கனகவடிவாகிப்
பொன்புடை நன்கொளிர் ஒளியே புத்தமுதே ஞான
   பூரணமே ஆரணத்தின் பொருள்முடிமேல் பொருளே
வன்புடையார் பெறற்கரிதாம் மணியே சிற்சபையின்
   மாமருந்தே என்றுரைமின் தீமையெலாம் தவிர்ந்தே.

You may have the heavenly joy and blessing of the celestial being
And also attain 8 mystic powers, only when you follow the
real path of unity of Holy Spirit of mankind (SANMAARGAM).
Your subtle body will get golden colour.
If you praise the Holy Spirit by doing meditation, you can avoid rebirth.

6. தீமைஎலாம் நன்மைஎன்றே திருஉளங் கொண்டருளிச்
   சிறியேனுக்கு அருளமுதத் தெளிவளித்த திறத்தை

ஆமயந்தீர்த்த இயற்கை இன்ப அனுபவமே மயமாய்
அம்பலத்தே விளங்குகின்ற அருட்பெருஞ் ஜோதியைஓர்
ஓமயவான் வடிவுடையார் உள்ளகத்தே நிறைந்த
ஒருபொருளைப் பெருங்கருணை உடைய பெரும்பதியை
நாமருவி இறவாத நலம்பெறலாம் உலகீர்
நல்லஒரு தருணம்இது வல்லை வம்மின் நீரே.

Oh people of the world! The Supreme God forgave my faults
He had given me nectar and natural heavenly joy;
That most merciful gracious God is within our forehead
in the form of a flame in the centre of a moral wheel.
Let us get into the narrow path where He is seated so as to get deathless life.
This is the best suited time for it.
Hurry up to come here (to me).

7. நீர்பிறரோ யான் உமக்கு நேய உறவலனோ
நெடுமொழியே உரைப்பன் அன்றிக் கொடுமொழி சொல்வேனோ
சார்புறவே அருளமுதம் தந்தெனை மேல்ஏற்றித்
தனித்தபெருஞ் சுகம்அளித்த தனித்த பெரும்பதிதான்
சீர்பெறவே திருப்பொதுவில் திருமேனி தரித்துச்
சித்தாடல் புரிகின்ற திருநாள்கள் அடுத்த
ஓர்புறவே இதுநல்ல தருணம் இங்கே வம்மின்
உலகியலீர் உன்னியவாறு உற்றிடுவீர் விரைந்தே.

Are you a stranger to me?
Am I not your benevolent relation?
My words will always be for your welfare And shall not bring harm to you.
The supreme god had given refuge and also divine nectar to me.
Subsequently, He lifted me into the narrow path
And made me have the divine happiness.
The time of his arrival in human form to do miracles is very near.
This is the best time for you to get boon from Him according to your desire.

8. விரைந்துவிரைந்து அடைந்திடுமின் மேதினியீர் இங்கே
மெய்மை உரைக்கின்றேன்நீர் வேறுநினையாதீர்
திரைந்துதிரைந் துளுத்தவரும் இளமைஅடைந் திடவும்
செத்தவர்கள் எழுந்திடவும் சித்தாடல் புரிய

வரைந்துவரைந் தெல்லாஞ்செய் வல்ல சித்தன்தானே
வருகின்ற தருணம்இது வரம்பெறலாம் நீவிர்
கரைந்துகரைந் துளம்உருகிக் கண்களில்நீர் பெருகிக்
கருணைநடக் கடவுளை உட்கருதுமினோ களித்தே.

Oh people of the world! Hurry up; hurry up to come here.
Don't suspect my words.
I am telling only truth.
This is the time for the arrival of the Supreme God
To do miracles by waking up all those who died.
If you think of Him whole heartedly and bow down with tears, you may get His boon.

9. களித்துலகில் அளவிகந்தகாலம் உலகெல்லாம்
களிப்படைய அருட்ஜோதிக் கடவுள்வருதருணம்
தெளத்திடும் எத்தருணம்அதோ என்னாதீர் இதுவே
செத்தவரை எழுப்புகின்ற திகழ்தருணம் உலகீர்
ஒளித் துரைக்கின்றேன் அலன் நான் வாய்ப்பறை ஆர்க்கின்றேன்
ஒருசிறிதும் அச்சமுறேன் உள்ளபடி உணர்ந்தேன்
அளித்திடு சிற்றம்பலத்தென் அப்பன் அருள் பெறவே
ஆசைஉண்டேல் வம்மின் இங்கே நேசமுடையீரே.

This is the time of arrival of the God of great graceful light
For doing everlasting miracles here.
This is the time to wake up dead persons.
Don't think that the time is far off.
I am not telling lie.
I know clearly without even an iota of doubt that the
Supreme Father is coming now.
That is why, I am announcing this in loud voice.
My dear friends, if you desire to get boon from my Father, come here immediately.

10. ஆசைஉண்டேல் வம்மின் இங்கே அருட்ஜோதிப் பெருமான்
அம்மையுமாய் அப்பனுமாய் அருளும் அருளாளன்
ஏசற நீத்தெனை ஆட்கொண்டு எண்ணியவா றளித்தான்
எல்லாஞ்செய் வல்லசித்தன் என்னுயிரில் கலந்தான்
தேசுடைய பொதுவில்அருள் திருநடனம் புரியத்
திருவுளங்கொண் டெழுந்தருளும் திருநாள் இங்கிதுவே

மோசஉரை எனநினைத்து மயங்காதீர் உலகீர்
முக்காலத் தினும் அழியா மூர்த்தம் அடைந் திடவே.

The God of great graceful light, who in the form of Father and Mother had given refuge to me and fulfilled all my desires, will come today and do miracles here.
He, who is having all the five mystic powers of creation,
protection, destruction, concealment and gracefulness
Had seated in my subtle body.
Don't confuse whether I am telling falsehood.
If you desire to get deathless life in all the three divisions
of time, (viz past, present and future,) you come here soon.

11. அடைந்திடுமின் உலகீர்இங் கிதுதருணம் கண்டீர்
அருட்ஜோதிப் பெரும்பதி என்அப்பன் வருதருணம்
கடைந்ததனித் திருவமுதம் களித்தருத்தி எனக்கே
காணாத காட்சிஎலாம் காட்டுகின்ற தருணம்
இடைந்தொருசார் அலையாதீர் சுகம் எனைப்போல் பெறுவீர்
யான்வேறு நீர்வேறென் றெண்ணுகிலேன் உரைத்தேன்
உடைந்த சமயக்குழிநின் றெழுந்துணர்மின் அழியா
ஒருநெறியாம் சன்மார்க்கத் திருநெறிபெற் றுவந்தே.

Oh people of the world! This is the time of arrival of my Father of great graceful light,
who had given divine nectar and showed unseen vision of the heaven to me.
You can also get His boon and divine happiness like me.
I tell all these things to you with the intention that
you should also get all the benefits like me And stand in par with me.
Don't have your mind oscillated.
You come out of the stirred up pit of religion
And get into the path of SANMARGAM (Unity of Holy
Spirit of mankind) so as to achieve salvation.

12. திருநெறி ஒன்றேஅதுதான் சமரசசன் மார்க்கச்
சிவநெறி என்றுணர்ந்துலகீர் சேர்ந்திடுமின் ஈண்டு
வருநெறியில் எனையாட்கொண் டருளமுதம் அளித்து
வல்லப சத்திகளெல்லாம் வழங்கிய ஓர்வள்ளல்
பெருநெறியில் சித்தாடத் திருவுளங்கொண் டருளிப்
பெருங்கருணை வடிவினொடு வருதருணம் இதுவே

கருநெறிவீழ்ந் துழாலாதீர் கலக்கமடை யாதீர்
கண்மையினால் கருத்தொருமித் துண்மை உரைத்தேனே.

Oh people of the world! You do clearly understand that the Holy Spirit of
mankind which is activating within our forehead is the form of formless unique God
And as such there is no disparity at all between man and man.
I reveal this fact under the name SANMARGAM
I invite you all to come and join me here.
The great gracious God had given me divine nectar and several mystic powers.
He will be arriving here now in a form of great mercy.
You don’t roam about in the path of darkness.
I reveal these facts with clear and firm mind.

13. உண்மையுரைக் கின்றேன் இங்குவந்தடைமின் உலகீர்
உரைஇதனில் சந்தேகித்துளறி வழியாதீர்
எண்மையினான் எனநினையீர் எல்லாஞ்செய் வல்லான்
என்னுள் அமர்ந் திசைக்கின்றான் இதுகேண்மின் நீவிர்
தண்மையொடு சுத்தசிவ சன்மார்க்க நெறியில்
சார்ந்துவிரைந் தேறுமினோ சத்தியவாழ் வளிக்கக்
கண்மைதரும் ஒருபெருஞ்சீர்க் கடவுள் எனப்புகலும்
கருணைநிதி வருகின்ற தருணம்இது தானே.

Oh people of the world! I invite you with truthful words to come here and join me.
Don't think low of me and be perplexed by doubting my words.
You understand that the Supreme God who is having
creation, etc. powers is seated within my body and declares these words.
You come soon to Holy SANMARGAM (Unity of Holy Spirit of mankind).
This is the time for the arrival of the great merciful unique God.

14. தானேதான் ஆகிஎலாம் தானாகி அலனாய்த்
தனிப்பதியாய் விளங்கிடும் என்தந்தையை என்தாயை
வானே அவ்வான் கருவே வான்கருவின் முதலே
வள்ளால் என்றன்பரெல்லாம் உள்ளா நின்றவனைத்
தேனே செம்பாகே என்றினித்திடுந் தெள்ளமுதைச்
சிற்சபையில் பெருவாழ்வைச் சிந்தைசெய்மின் உலகீர்
ஊனேயும் உடலழியாது ஊழிதொறும் ஓங்கும்
உத்தம சித்தியைப்பெறுவீர் சத்தியம் சொன்னேனே.

Oh people of the world! You concentrate in your mind the unique God,
Who is my Father, Mother and Supreme power in the heaven.
All Saint praise him as merciful sweet nectar.
He is seated in the narrow path which is within our forehead.
I promise solemnly that you will get everlasting life and mystic powers.

15. சத்திய வேதாந்தமெலாம் சித்தாந்தம் எல்லாம்
தனித்தனிமேல் உணர்ந்துணர்ந்தும் தனையுணர்தற்கரிதாய்
நித்திய சிற்சபை நடுவே நிறைந்து நடம் புரியும்
நித்த பரிபூரணனைச் சித்தசிகா மணியை
அத்தகையோர் பெரும்பதியை அருமருந்தை அடியேன்
ஆவியை என் ஆவியிலே அமர்ந்த தயாநிதியைச்
சித்தியெலாம் எனக்களித்த சிவகதியை உலகீர்
சிந்தைசெய்து வாழ்த்துமினோ நிந்தை எலாம்தவிர்ந்தே.

Oh people of the world! Even if you learn sincerely the true
Vedantha and Siddhantha, the subtle body and the Holy Spirit which are seated in the narrow path within your forehead, could not be seen.
You firmly think in your mind the Holy Spirit which is the form of everlasting glorious monarch of the heaven, seated within our forehead and activating our body.
You praise the unique God without abusing my words.
You believe that He had given mystic Powers to me and
was also seated in my subtle body.

16. நிந்தையிலார் நெஞ்சகத்தே நிறைந்தபெருந் தகையை
நிலையனைத்தும் காட்டி அருள்நிலை அளித்த குருவை
எந்தையை என்தனித்தாயை என்னிருகண் மணியை
என்உயிரை என்உணர்வை என்அறிவுள் அறிவை
சிந்தையிலே தனித்தினிக்கும் தெள்ளமுதை அனைத்தும்
செய்யவல்ல தனித்தலைமைச் சிவபதியை உலகீர்
முந்தைமல இருட்டொழிய முன்னுமினோ கரண
முடுக்கொழித்துக் கடைமரண நடுக்கொழித்து முயன்றே.

Oh people of the world! He is in the minds of those who do not abuse Him.
He had shown me all the heavenly visions.
He is my Preceptor; He is my Father and Mother;

He is the pupil of my eyes; He is my soul;
He is my subtle body; He is divine nectar and
He is the Supreme God of creation etc. mystic deeds.
If you want to get rid of your past sins, You approach Him
by doing meditation after giving up arrogance and other evil qualities.

17. முயன்றுலகில் பயன்அடையா மூடமதம் அனைத்தும்
முடுகி அழிந்திடவும்ஒரு மோசமும் இல்லாதே
இயன்றஒரு சன்மார்க்கம் எங்கும் நிலைபெறவும்
எம்மிறைவன் எழுந்தருளல் இதுதருணம் கண்டீர்
துயின்றுணர்ந்தே எழுந்தவர்போல் இறந்தவர்கள் எல்லாம்
தோன்ற எழுகின்றதிது தொடங்கி நிகழ்ந்திடும் நீர்
பயின்றறிய விரைந்துவம்மின் படியாத படிப்பைப்
படித்திடலாம் உணர்ந்திடலாம் பற்றிடலாம் சுகமே.

All religious ceremonies without taking any strain to enter into the narrow path,
where the Holy Spirit is seated, are worthless and deserve to be stopped.
This is the time for the arrival of the Supreme God to spread
the path of Sanmargam(Unity of the Holy Spirit of mankind) in the world
And to wake up all the dead persons.
You can see the dead persons coming out as if they were awakened from sleep.

18. சுகமறியீர் துன்பம் ஒன்றே துணிந்தறிந்தீர் உலகீர்
சூதறிந்தீர் வாதறிந்தீர் தூய்மையறிந் திலிரே
இகம்அறியீர் பரம்அறியீர் என்னே நுங் கருத்தீது
என்புரிவீர் மரணம்வரில் எங்குறுவீர் அந்தோ
அகமறியீர் அனகமறிந் தழியாத ஞான
அமுதவடிவம் பெறலாம் அடைந்திடுமின் ஈண்டே
முகமறியார் போலிருந்தீர் என்னை அறியீரோ
முத்தரெலாம் போற்றும் அருட் சித்தர்மகன் நானே.

Oh people of the world! You are revolving in birth and death without knowing
divine happiness. You know the ways of deception and fraud,
but don't know the way of getting salvation.
You don’t know the Holy Spirit which is within your forehead and the God in the heaven.
What do you think of your future? What will you do when death comes?
Where will you go? Alas! You can get deathless life only

if you see the subtle body and the Holy Spirit by doing meditation.
Don’t you know that I am the son of the Supreme God?
So, you come to me.

19. நான்உரைக்கும் வார்த்தைஎலாம் நாயகன்தன் வார்த்தை
நம்புமினோ நமரங்காள் நற்றருணம் இதுவே
வான்உரைத்த மணிமன்றில் நடம்புரிஎம் பெருமான்
வரவெதிர்கொண்டு அவன் அருளால் வரங்கள்எலாம்பெறவே
தேன்உரைக்கும் உளம்இனிக்க எழுகின்றேன் நீவிர்
தெரிந்தடைந் தென்உடன் எழுமின் சித்திபெறல் ஆகும்
ஏனுரைத்தேன் இரக்கத்தால் எடுத்துரைத்தேன் கண்டீர்
யானடையும் சுகத்தினை நீர்தான் அடைதல் குறித்தே.

Oh my relations and friends! You believe that all my words are of God.
This is the best time of arrival of the Supreme God who is
seated as Holy Spirit within our forehead.
If you await His arrival you can get his graceful boon.
I am waiting for Him with sweet heart.
If you understand that I am telling truth and follow me,
you can get numerous mystic powers.
Do you know why I am inviting you all?
It is because of my thinking that all of you should get the divine happiness like me.

20. குறித்துரைக்கின்றேன் இதனைக்கேண்மின் இங்கேவம்மின்
கோணும்மனக் குரங்காலே நாணுகின்ற உலகீர்
வெறித்த உம்மால் ஒருபயனும் வேண்டுகிலேன் எனது
மெய்யுரையைப் பொய்யுரையாய் வேறுநினை யாதீர்
பொறித்தமதம் சமயம்எலாம் பொய்பொய்யே அவற்றில்
புகுதாதீர் சிவம்ஒன்றே பொருள் எனக்கண் டறிமின்
செறித்திடு சிற்சபைநடத்தைத் தெரிந்து துதித்திடுமின்
சித்திஎலாம் இத்தினமே சத்தியம்சேர்ந் திடுமே.

Oh people of the world! You hesitate to listen to my words on account of
your monkey like crooked mind. You don't think my truthful words as falsehood.
You come here without perplexity. I don't require anything from you.
I request you not to get immersed in the baseless versions of various religions.
You understand by experience that the formless unique

God himself is in the form of Holy Spirit (moral wheel with a flame in the centre) and seated in your forehead.
If you praise Him truly you can get mystic powers today itself.

21. சேர்ந்திடவே ஒருப்படுமின் சமரச சன்மார்க்கத்
திருநெறியே பெருநெறியாம் சித்திஎலாம் பெறலாம்
ஓர்ந்திடுமின் உண்ணுதற்கும் உறங்குதற்கும் உணர்ந்தீர்
உலகம்எலாம் கண்டிடும் ஓர்உளவை அறிந்திலிரே
வார்ந்தகடல் உலகறிய மரணம்உண்டே அந்தோ
மரணம் என்றால் சடம் எனும்ஓர் திரணமும் சம்மதியா
சார்ந்திடும் அம்மரணமதைத் தடுத்திடலாம் கண்டீர்
தனித்திடு சிற்சபைநடத்தைத் தரிசனஞ் செய்வீரே.

Come out of your religious activities And join together on the
SAMARASA SANMARGAM (Unity of Holy Spirit of mankind) so as to get mystic powers.
You know only to eat and sleep, But don't know the expedient way,
which was found out by the great Saints.
AIas! When death comes, this body cannot stand even for a second.
If you see the Holy Spirit by doing meditation, you can avoid death.

22. செய்தாலும் தீமைஎலாம் பொறுத்தருள்வான் பொதுவில்
திருநடஞ்செய் பெருங்கருணைத் திறத்தான் அங்கவனை
மெய்தாவ நினைத்திடுக சமரசசன் மார்க்கம்
மேவுக என்றுரைக்கின்றேன் மேதினியீர் எனைத்தான்
வைதாலும் வைதிடுமின் வாழ்த்தெனக்கொண் டிடுவேன்
மனங்கோணேன் மானம் எலாம் போனவழி விடுத்தேன்
பொய்தான்ஓர் சிறிதெனினும் புகலேன் சத்தியமே
புகல்கின்றேன் நீவிர் எலாம் புனிதமுறும் பொருட்டே.

The Supreme God who is in the form of the Holy Spirit will forgive
all our evil deeds with his abundant gracefulness.
I won't tell even an iota of falsehood.
I am telling only the truth in order to purify your birth.
So, you think of Him with true heart and join in the
Samarasa Sanmargam (Unity of Holy Spirit of mankind).
Oh people of the world! Even if you scold me,
I shall consider those words as blessings and I won't feel sorry.

I had forgotten even when some people in the world had assassinated my character.

23. பொருட்டல நும்போகம்எலாம் பொய்யாம் இங்கிதுநான்
புகலுவதென் நாள்தொறு நும்புந்தியிற் கண்டதுவே
மருட்டுலகீர் இருட்டுலகில் மடிவ தழகலவே
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ வம்மின் இங்கே
பொருட்டிறஞ்சேர் சுத்தசிவ சன்மார்க்க நிலையில்
பொருந்துமின் சிற்சபை அமுதம் அருந்துமின் அன்புடனே
அருட்டிறஞ் சேர்ந்தெண்ணியவா றாடுமினோ நும்மை
அடுப்பவரே அன்றி நின்றுதடுப்பவர் மற்றிலையே.

Oh people of bewildered mind! The worldly happiness is not permanent.
I need not say this newly to you because, you experience this, in your day to day life.
I tell you that it is not fair to die in the sinful dark world.
You come here to get deathless life. You get yourself joined in the
SUDDHA SIVA SANMARGAM (Unity of Holy Spirit of mankind)
so as to drink nectar which is in your forehead.
You will get all boons as you desire from the kind and gracious Lord.
There is none to prevent you, but some may also join you.

24. மற்றறிவோம் எனச்சிறிது தாழ்த்திருப்பீர் ஆனால்
மரணமெனும் பெரும்பாவி வந்திடுமே அந்தோ
சற்றும்அதை நும்மாலே தடுக்க முடியாதே
சமரச சன்மார்க்க சங்கத் தவர்கள் அல்லால் அதனை
எற்றிநின்று தடுக்கவல்லார் எவ்வுலகில் எவரும்
இல்லைகண்டீர் சத்திய மீதென்மொழிகொண் டுலகீர்
பற்றிய பற்றனைத்தினையும் பற்றற விட்டர் உளம்
பலப்பற்றே பற்றுமினோ என்றும் இறவீரே.

If you postpone your visit to this place even for a short period,
It is likely that the evil death may take away your life.
Alas! The death cannot be prevented in any way.
None in any world can prevent the death other than those who have joined
SAMARASA SANMARGA SANGAM (Unity of Holy Spirit of mankind)
and understood the artifice of over coming death.
If you follow my truthful words and catch hold of the
Supreme power who is seated within your forehead, you can have deathless life.

25. இறந்தவரை எடுத்திடும்போ தரற்றுகின்றீர் உலகீர்
இறவாத பெருவரம்நீர் ஏன்அடைய மாட்டீர்
மறந்திருந்தீர் பிணிமூப்பில் சம்மதமோ நுமக்கு
மறந்தும்இதை நினைக்கில்நல்லோர் மனம்நடுங்கும்கண்டீர்
சிறந்திடு சன்மார்க்கம் ஒன்றே பிணிமூப்பு மரணம்
சேராமல் தவிர்த்திடுங்காண் தெரிந்து வம்மின் இங்கே
பிறந்தபிறப் பிதில்தானே நித்திய மெய்வாழ்வு
பெற்றிடலாம் பேரின்பம் உற்றிடலாம் விரைந்தே.

Oh people of the world! When you cry aloud at the time of removing the
dead body to the burial ground, have you forgotten to get the boon of deathless life?
Are you prepared to face diseases and death?
Saints would be afraid of diseases and death.
You bear in your mind that death can be prevented by getting into
SANMARGAM (Unity of Holy Spirit of mankind).
If you come to me you can get deathless life and divine happiness during this birth.

26. உற்றமொழி உரைக்கின்றேன் ஒருமையினால் உமக்கே
உறவன் அன்றிப் பகைவன் எனஉன்னாதீர் உலகீர்
கற்றவரும் கல்லாரும் அழிந்திடக் காண்கின்றீர்
கரணம்எலாம் கலங்கவரும் மரணமும் சம்மதமோ
சற்றும்இதைச் சம்மதியா தென்மனந்தான்; உமது
தன்மனந்தான் கன்மனமோ வன்மனமோ அறியேன்
இற்றிதனைத் தடுத்திடலாம் என்னொடு சேர்ந்திடுமின்
என்மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கந் தானே.

Oh people of the world! I show the virtual Path to you with truthful words.
I am related to you, but not your enemy.
Don't you see that the intellectuals and illiterates face the death without disparity?
Do you like the death causing inaction of all the five faculties of sight, smell, hearing, taste and touch by which the body perceives things?
My heart won't tolerate for such death to you.
I don’t know whether your heart is of rock.
If you join me in SANMARGAM (Unity of Holy Spirit of mankind),
you can get deathless life.

27. சன்மார்க்கப் பெருங்குணத்தார்தம் பதியை என்னைத்
தாங்குகின்ற பெரும்பதியைத் தனித்த சபாபதியை
நன்மார்க்கத் தெனைநடத்திச் சன்மார்க்க சங்கம்
நடுவிருக்க அருளமுதம் நல்கிய நாயகனைப்
புன்மார்க்கர்க் கறிவரிதாம் புண்ணியனை ஞான
பூரண மெய்ப்பொருளாகிப் பொருந்திய மாமருந்தை
அன்மார்க்கம் தவிர்த்தருளி அம்பலத்தே நடஞ்செய்
அருட்பெருஞ்ஜோதியை உலகீர் தெருட்கொளச்சார்வீரே.

SANMARGA SANGAM (The forum for the Unity of Holy Spirit of mankind)
is the only virtual path of great Saints.
This path enables to enter into the narrow path to reach the
Holy place where the Supreme God is seated in the form of Holy Spirit.
That truthful form of God which is seated within the forehead
could not be seen by wicked persons. Oh people of the world!
You get rid of false path and surrender to the great graceful light.

28. சார்உலக வாதனையைத் தவிர்த்தவர் உள்ளகத்தே
சத்தியமாய் அமர்ந்தருளும் உத்தம சற்குருவை
நேர்உறவே எவராலும் கண்டுகொளற் கரிதாம்
நித்திய வான்பொருளை எலாநிலைகளுந்தான் ஆகி
ஏர்உறவே விளங்குகின்ற இயற்கைஉண்மை தன்னை
எல்லாம்செய் வல்லபத்தை எனக்களித்த பதியை
ஓர்உறவென்றடைந் துலகீர் போற்றிமகிழ்ந் திடுமின்
உள்ளம்எலாம் கனிந்துருகி உள்ளபடி நினைந்தே.

The eternal Supreme God is seated as a virtual Preceptor
In the minds of those who have avoided sinful activities of this world.
He is Omni present and seated within our forehead.
It is very rare to see the form of Holy Spirit by anybody.
He had endowed me the Supreme powers of creation, etc.
If you want to get divine happiness,
you can approach Him as your relative and praise Him with tender heart.

Translated from the book “Footsteps of Saint Ramalingam,” with permission from the author Mr B Kamalakannan(publisher: VanathiPathippkam, 2014).